DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: CC.No. 75/2023**

**prosecution witness: Pw 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**A1 absent petition filed. A2 present**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜேஸ்வரி | ஜாதி | : |
| த/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**18.07.2023**

முதல் விசாரணை:-

1. நான் இராமேஸ்வரம் மாந்தோப்பில் வசித்து வருகிறேன். வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் 2வது எதிரி மற்றும் 1வது எதிரி மெல்டசை தெரியும். கடந்த 01.08.2019-ம் தேதி என் அக்கா அவரது வீட்டில் தனியாக இருந்த போது 1ம் எதிரி என் அக்காவின் வீட்டிற்குள் சென்று என் அக்காவை அடித்தார். என் அக்கா துறைமுகம் காவல் நிலையம் அருகில் இருப்பதால் அங்கு செல்ல முயன்ற போது கம்பை எடுத்து என் அக்காவை இடது கண் புருவத்தில் அடித்து காயம் ஏற்படுத்தினார்.

2. பின்பு இடது காதில் தோடு மற்றும் மாட்டலை சதையுடன் அறுத்துவிட்டார்கள். பின்பு என் அக்கா இராமேஸ்வரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றார். அங்கிருந்து மேற்சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். நடந்த சம்பவத்திற்கு அ.சா.1 புகார் கொடுத்தார் அதில் நான் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தேன்.என்னிடம் காட்டப்பப்படும் புகார் மனுவில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையது. அது அ.சா.ஆ-2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.**